





ஆபத்து வெளிநாட்டு தீயசக்திகளிடமிருந்து வர இருப்பதாக அரசியல் மேடைகளில் பலர் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

ஆனால் உண்மையான ஆபத்து வெளியிலிருந்து வரவில்லை; உள்நாட்டில் உள்ள சில சக்திகளே இந்த ஆபத்தை உருவாக்குகின்றன என்ற உண்மை இன்னும் உணரப்படவில்லை.

மதத்தின் பெயரால் நமது நாட்டை ரத்தக் காடாக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள சக்திகளில் இந்து முன்னணியும் ஒன்று. இந்தியா தனது சுதந்திரத்தின் 40வது வயதைக் கொண்டாடிய போது, இந்து முன்னணி தமிழ்நாட்டில் இந்து - முஸ்லீம் கலவரத்துக்கு வழிவகுத்துக் கொண்டிருந்தது.

இந்து முன்னணி சென்னை மாவட்டப்பிரிவின் பெயரால் நகரத்தில் ஒட்டியிருந்த சுவரொட்டி வாசகங்களைப் பாருங்கள்: 'முஸ்லீம் வெறியர்களால் 80 லட்சம் இந்துக்கள் கொலை செய்யப்பட்டு இந்துப் பெண்களைக் கற்பழித்து பாரதத்தைத் துண்டாடிய துக்க நாள் 1947 ஆகஸ்ட் 14'.

இந்த முதல் வாக்கியத்திலேயே பொய் அடங்கிக் கிடக்கிறது. 1947 ஆகஸ்டில் மதக் கலவரங்கள் நடந்த போது இரு மதங்களிலும் இருந்த வெறியர்கள் இரு தரப்பினரையும் கொல்வதும் கற்பழிப்பதும் நிகழ்ந்தது. இந்துக்கள் 10 லட்சம் பேரும் முஸ்லீம்கள் 10 லட்சம் பேரும் பாதிக்கப்பட்டார்கள் என்பதே வரலாற்று உண்மை.

ஆனால் இந்து முன்னணியின் சுவரொட்டி 80 லட்சம் இந்துக்கள் கொல்லப்பட்டதாக ஒரு பொய்யை வெளியிடுகிறது. இந்துக்கள் கட்சி, ஜாதி வேறுபாடில்லாமல் வந்து அஞ்சலி செலுத்தவேண்டுமென்றும் கோருகிறது.

இந்தியாவுக்குள் மத அடிப்படையில் பிளவுகளை ஏற்படுத்தி இந்தியாவை சிதறடிக்கும் சக்திகள்தான் இதே நோக்கத்தோடு வெளியிலிருந்து முயற்சிக்கும் சக்திகளுக்கு ஏற்றவையாக அமைகின்றன.

1947ல் ஆங்கிலேயர்கள் அவசரம் அவசரமாக இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்துவிட்டு தனியே பாகிஸ்தானை உருவாக்கி வைத்துவிட்டு சென்றதற்குப் பல பின்னணிக்காரணங்கள் இருக்கின்றன. காங்கிரஸ் கட்சிக்குள்ளே சோஷலிசப் பிரிவு பலம் வாய்ந்ததாக உருவாகி வந்தது. காங்கிரசுக்கு வெளியே கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்து கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில் சுதந்திர இந்தியா சோஷலிசப் பாதைக்கோ அல்லது சோவியத் யூனியனின் சார்பாகவோ போய்விடக்கூடாது என்ற கவலை பிரிட்டிஷ் ஆட்சிக்கு இருந்து வந்தது. அந்த காலகட்டத்தில் பிரிட்டனுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே இருந்த பகையுணர்வு கொஞ்சமல்ல.

எனவேதான் இந்தியாவில் சோஷலிச அடிப்படை உருவாகாமல் தடுக்கவும், தொடர்ந்து காமன்வெல்த்தில் இந்தியாவை தக்க வைத்துக்கொள்ளவும் மதப் பிரிவினையை ஆங்கிலேயர் பயன்படுத்திக் கொண்டார்கள். மத அடிப்படையில் இந்தியா பிரிக்கப்படுவதை அதற்கு முன்னாலிருந்தே ஊக்குவித்தும் வந்தார்கள். காங்கிரஸ் தலைவர்கள், முஸ்லீம் லீக் தலைவர்கள் இருசாராருக்கும் இருந்த பதவி ஆசையை பிரிட்டன் பயன்படுத்திக்கொண்டது.

இந்த வரலாற்று அடிப்படையில் பார்த்தோமானால் இந்தியா மத அடிப்படையில் மேலும் மேலும் பிளவுபடுவதற்கும் ரத்தக் களறி ஏற்படுவதற்குமான வித்தை அன்றே பிரிட்டன் ஊன்றிவிட்டுப்போனது புரியும். இன்றும் ஏகாதிபத்தியத்தின் விஷம வேலைகளுக்கு மதத் தீவிரவாதிகளே உகந்தவர்களாகிவிடுகிறார்கள்.

இதனால்தான் மத அடிப்படையிலான பிரிவினையை எதிர்த்த காந்தி இந்துமத வெறியனால் கொல்லப்பட்டார். இதனால்தான் சோஷலிசம், கம்யூனிசம் போன்ற தத்துவங்களை இந்து முன்னணி முதலான மதத் தீவிரவாதிகள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

இந்து மதத்தின் ஆதிக்கத்தை விரும்பும் ஆர்.எஸ்.எஸ். தன் அரசியல் கட்சியாக அன்று ஜனசங்கத்தை வைத்திருந்தது. இன்று பாரதீய ஜனதா ஆர்.எஸ்.எஸ்.சின் அரசியல் முன்னணியாக உள்ளது. இது தவிர இந்து முன்னணி போன்ற அமைப்புக்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

முஸ்லீம் மதத்தில் உள்ள தீவிரவாதிகளின் இயக்கங்களாகவும் மத வேறுபாட்டை பெரிதாக்கி லாபம் தேடும் அமைப்புக்களாகவும் ஜமாதே இஸ்லாமி, முஸ்லீம் மஜ்லிஸ் முஷாவரத், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், ஆல் இந்தியா முஸ்லீம் லீக், ஜமீயத் உலமா போன்றவை செயலாற்றி வந்திருக்கின்றன. உண்மை என்னவென்றால் ஒரு மதத்தில் உள்ள தீவிரவாதக் குழு தொடர்ந்து

இயங்க வேண்டுமென்றால் எதிர் மதத்திலும் அப்படி உள்ள குழு தேவை. ஒன்றை இன்னொன்று உயிரோடு வைத்திருக்கிறது. அரசியலில் கருணாநிதி இல்லாவிட்டால் எம்.ஜி.ஆருக்கு வெறுத்துப் போய்விடுமென்கிற மாதிரிதான்.

ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி, பாரதீய ஜனதா கட்சிகள் இருந்தால்தான் ஜமாதே இஸ்லாம், மஜ்லிஸ், ஜமீயத் உலமா, லீக் இருக்க முடியும். இதனால் அதற்கு லாபம். அதனால் இதற்கு லாபம். நஷ்டம் எல்லா மக்களுக்கும்தான்.

சுதந்திரத்துக்குப் பின் சுமார் 20 வருடங்கள் வரை மதக் கலவரங்கள் ஏற்படவில்லை. பிறகு மீண்டும் மேற்சொன்ன மதவாத அமைப்புக்கள் வளர்ந்து வந்திருக்கின்றன. அரசியல்வாதிகளின் தற்காலிக லாப நோக்கம் இவற்றை வளர்த்துவிட்டது. விளைவாக கலவரங்கள் இன்று சகஜமாகிவிட்டன.

ஆனால் இந்தக் கலவரங்கள்கூட வட இந்தியாவைத் தாண்டி வந்ததில்லை.

தமிழ்நாடு எப்போதுமே அமைதியான பகுதியாகவும், எல்லா மதத்திற்கும் மதவேறுபாடுகளைத் தாண்டி ஒன்றாக வாழும் இடமாகவும் இருந்து வந்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணமாக விடுதலைக்கு முன்னால் பாரதி போன்றோர் ஆற்றிய சமூகப் பணிகளையும் பிறகு பெரியார் ஈ.வே.ரா. நடத்திய பகுத்தறிவு இயக்கத்தையும் குறிப்பிட வேண்டும்.

மத அடிப்படையிலான மூடத்தனங்களுக்கு எதிராக பெரியார் நடத்திய இயக்கம்தான் மத அடிப்படையிலான மிகப் பெரும் மூடத்தனமான வன்முறைக்குப் போகாமல் மக்களைத் தடுத்து வந்திருக்கிறது.

ஆனால் அண்மைக் காலங்களில் கன்னியாகுமரி மாவட்டம், வடஆற்காடு மாவட்டம் போன்ற கிறித்துவர், முஸ்லீம்கள் கணிசமாக வாழும் பகுதிகளில் இந்து முன்னணி போன்ற மதவாத அமைப்புக்கள் மக்களிடையே பிரிவினையைத் துாண்டிவிடும் வேலையை செய்து வருகின்றன. இதன் விளைவாகத்தான் மண்டைக் காடு, புளியந்தோப்பு நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன.

வட இந்தியாவில் மதக் கலவரங்களுக்குக் காரணம் என்ன என்பது பற்றி காஞ்சி சங்கர மடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதி அண்மையில் ஒரு வார இதழுக்குத் தந்த பேட்டியில் கூறியிருப்பதைப் பார்க்கலாம்: "வடநாட்டில் மட்டுமல்ல, மற்ற எல்லாப் பகுதிகளிலும் சரி, மாற்று மதத்தினரின் வளர்ச்சி, நம் இந்தியாவின் பொருளாதார, சமூக வளர்ச்சியைக் காட்டிலும் அதிகமாக வளர்ந்துகொண்டு வருகிறது" என்கிறார் சுவாமிகள். இந்தியாவின் மிகப்பெரிய முதலாளிகள், தொழிலதிபர்கள், பணக்காரர்கள் எல்லாரும் பெரும்பான்மையும் இந்துக்கள்தான். சுவாமிகளுக்கு உதவிகள் செய்துவருவதுகூட தமிழ்நாட்டின் மிகப்பெரிய இந்து தொழிலதிபர் தான்.

உண்மைக்கு மாறாக ஜெயேந்திர சரஸ்வதி போன்ற மதத் தலைவர்கள் பேசுவதற்குக் காரணம் வரலாற்று அறிவின்மையும், மதப்பற்றும்தான். அதே பேட்டியில் இலங்கைப் பிரச்சனை பற்றி பதில் கூறும் போது சுவாமிகள் கூறுகிறார்: "(ஸ்ரீலங்காவில்) சிங்களவர்கள், தொழிலாளர்கள்,

அறிவு ஜீவிகள் என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன". இது என்ன அடிப்படையிலான பிரிவு? தொழிலாளர்கள், அறிவுஜீவிகள் தவிர சிங்களவர்கள் மூன்றாவது பிரிவு என்றால், சிங்களவர்களில் தொழிலாளர்களோ அறிவுஜீவிகளோ கிடையாதா? எந்த சாத்திர அறிவும் சமூக ஞானமும் இல்லாததால்தான் இப்படிப்பட்ட அபத்தமான கருத்துக்கள் பரவுகின்றன. சொல்பவர்கள், கேட்பவர்கள் இருவருமே என்ன சொல்லப்படுகிறது என்பது பற்றிக் கவலைப்படாத நிலை.

இதே பேட்டியில் சுவாமிகள் "வட இந்தியாவில் அகதிகளாக வங்கதேசத்தலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் வந்து குடியேறியவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள நிலையிலிருந்து அரசாங்க உதவியால் ரேஷன் கார்ட் ஹோல்டராகி, பிறகு மெயின் ஓட்டராகும் போது சண்டைகள் தகராறுகள் ஏற்பட்டு மதக் கலவரங்களாக வெடிக்கின்றன" என்று கூறியிருக்கிறார்.

இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் உள்ள வேறுபாடு ஒரே மதத்துக்குள் உள்ளவரானால் ஜாதிச் சண்டையாகவும், வெவ்வேறு மதமானால் மதக்கலவரமாகவும் திசை திருப்பப்படுகிறது என்பதே உண்மை. அப்படி திசை திருப்புவதற்குத் தூண்டுகோலாக சங்கராச்சாரி, பங்காரு அடிகள் போன்றோரும், இந்து முன்னணி, ஜமாதே இஸ்லாமி போன்ற அமைப்புக்களும் உதவுகின்றன. இறுதியில் கலவரம் ஏற்படும்போது இரு மதங்களிலும் உள்ள ஏழைகள் சாகிறார்கள்; பணக்காரர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்.

தமிழ்நாட்டுக்குள் பிற மத அகதிகள் வந்ததே இல்லை. ஆனால் இங்கே மதக்கலவரம் தூண்டப்படுவதற்குக் காரணம் மதத் தீவிரவாதிகள்தான்.

இந்து முன்னணியின் அருவெறுக்கத்தக்க சுவரொட்டி சென்னை நகரில் பிரதான பகுதிகளில் ஒட்டப்படவில்லை. மாறாக எங்கெல்லாம் முஸ்லீம்கள் அதிகமாக வசிக்கிறார்களோ அந்தப்பகுதிகளில் தேர்ந்தெடுத்து ஒட்டப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்ட வேண்டும். போஸ்டரிலேயே அச்சகத்தின் பெயர் 'கனகதுர்கா லித்தோ சென்னை - 2' என்று தரப்பட்டிருக்கிறது. முன்னணிப் பிரமுகர்களான 'கே.பி.எஸ்.பொன் பாண்டியன், பி.எஸ்.எஸ்.தனுஷ்கோடி, டி.கே.சி.ஜெயம், வி.டி.ஆர். பைபிள் சண்முகம், நேதாஜிபாலு, காமாட்சி பாண்டியன், முனிராஜ், பரமேஸ்வரன், ஒய்.எஸ்.கண்ணன், எஸ்.சக்தி வேல்' ஆகியோரின் பெயர்களும் காணப்படுகின்றன. தமிழக அரசு அதிகாரிகளும், காவல் அதிகாரிகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போதுதான் எந்த மதத்தைச் சேர்ந்த வெறியர்களும் விஷமத்தில் ஈடுபடமுடியாத நிலைமை வரும்.

இந்தச் செய்திக் கட்டுரை வெளிவருகிற விசிட்டர் இதழின் ஆசிரியரும் வெளியிடுபவருமான இப்ராகிம், முஸ்லிம் என்பதால் இந்தக் கட்டுரையைப் போட்டிருக்கிறார்கள் என்ற துஷ்பிரசாரம் எழக்கூடும். அதுபற்றி பொருட்படுத்த வேண்டியதில்லை.

ஒவ்வொருவருக்கும் அவரவர் மத அடிப்படையில் நம்பிக்கை கொள்ளவும், வழிபடவும் உரிமை உண்டு. ஆனால் இன்னொரு மதத்தினர் மீது வெறுப்பேற்படுத்தவும் கலவரத்தைத்

துாண்டவும் முயற்சி செய்தால் அதை எந்த மதத்திலுள்ள தீவிரவாதிகள் செய்தாலும் கண்டிக்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டும். உலகில் மத அடிப்படையிலான எந்த அரசும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்ததாக வரலாறு இல்லை. மதமே மக்களுடைய பிரச்சனையாக்கப்பட்டால், அதை எதிர்ப்பதே சரியானதாக, இருக்கும்.

விசிட்டர்

**02-09-1987**